### சைதையில் ‘அன்புக் கரங்கள்’ திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளுடன், ஒருநாள் சுற்றுலா!

# மற்ற குழந்தைகளுக்கும் இத்தகைய மகிழ்ச்சியை கழகத்தினர் வழங்கிட வேண்டும்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, அக்.7-

முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட ‘அன்புக் கரங்கள்’ திட்டத்தில் சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள 300 குழந்தை களுடன் ஒரு நாள் சுற்றுலாவுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஏற்பாடு செய்தார்.

நேற்று முன்தினம் முழு நாள் குழந்தைகளுடன் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டு ‘இட்லி கடை’ திரைப்படம் சிறப்புக் காட்சி பார்த்து தியாகராயர் நகர் துணிக்கடையில் அவர்களுக்குப் பிடித்த உடைகளை வாங்கித் தந்து இனிப்புகள் வழங்கி வழி அனுப்பினார்.



இந்நிகழ்வுகள் வலைதளங்களில் வைரலாகின. அதனையொட்டி, நேற்று வலைதளப் பதிவிட்ட கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இத்தகைய மகிழ்ச்சியை மற்ற குழந்தைகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வழங்கிட வேண்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**கல்விக்கான உதவிகளை வழங்குவதைக் கடந்தும், உறவாய் அரவணைத்து மகிழ்ச்சியை வழங்குவதே ‘அன்புக்கரங்கள்!’**

**இத்தகைய மகிழ்ச்சியை மற்ற குழந்தைகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வழங்கிட வேண்டும்!**

**“சின்னச் சின்ன அன்பில்தானே ஜீவன் இன்னும் இருக்கு!”**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 மாநில அளவில் நடைபெற்று வரும் போட்டிகளில் நேற்று (06.10.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கால்பந்து போட்டி வெற்றி பெற்ற வீரர்களுக்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பரிசுகளை வழங்கி, பாராட்டினார். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் திருமதி. எல். சுஜாதா உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளனர்.

### ஆனைமலை புலிகள் காப்பகத்தில்

# கோழிக்கமுத்தி யானைகள் முகாமில் பாகன் கிராமம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து 6 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார்!

**சென்னை, அக்.7-**

**ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள கோழிக்கமுத்தி யானைகள் முகாமில் இந்தியாவின் இரண்டாவது பாகன் கிராமத்தை திறந்து வைத்து, 6 நபர்களுக்கு காவடி பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள கோழிக்கமுத்தி யானைகள் முகாமில், பாகன்கள் மற்றும் யானை பராமரிப்பாளர்களின் நலனுக்காக 5.40 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 47 பணியாளர் குடியிருப்புகள் கொண்ட இந்தியாவின் இரண்டாவது யானைபாகன் கிராமத்தை திறந்து வைத்தார்.

மேலும், யானைகளை பராமரிக்கும் காவடி பணியிடங்களுக்கு 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காட்டில் இந்தியாவின் முதல் யானைபாகன் கிராமம் 13.5.2025 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, யானைகளின் பராமரிப்பு மற்றும் தோழமைக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கும் பாகன்கள் மற்றும் காவடிகளின் தன்னலமற்ற சேவை அங்கீகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கோழிக்கமுத்தி யானைகள் முகாமில் இந்தியாவின் இரண்டாவது பாகன் கிராமம் அதன் தொடர்ச்சியாக, கோழிக்கமுத்தி யானைகள் முகாமில், பாகன்கள் மற்றும் யானை பராமரிப்பாளர்களின் நலனுக்காக 5.40 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 47 பணியாளர் குடியிருப்புகள் கொண்ட இந்தியாவின் இரண்டாவது யானைபாகன் கிராமத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது. இந்தியாவின் பழமையான யானை முகாமில் ஒன்றான கோழிக்கமுத்தி யானைகள் முகாம், யானை மேலாண்மையில் பல தலைமுறைகளாக பாரம்பரிய அறிவைப் பெற்ற பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த யானைப் பாகன்களின் இருப்பிடமாகும். இந்த முகாமில் தற்போது 24 யானைகள் உள்ளன. முதலமைச்சரின் வழிகாட்டுதலின் படி, இம்முகாம்களில் பாதுகாப்பு விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக யானைகளைப் பார்க்கும் காட்சியகம் மற்றும் பார்வையாளர் நடைபாதை போன்ற நவீன வசதிகளுடன் மேம்படுத்தப் பட்டுள்ளன.

ஒரு முன்னோடி முயற்சியாக, மாநில திட்டக்குழு நிதியிலிருந்து இம்முகாமில் 3.50 கோடி ரூபாய் செலவில் பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்பு (BESS) கொண்ட சூரிய சக்தியில் இயங்கும் மைக்ரோகிரிட் நிறுவப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் 124 kWp சூரிய சக்தி ஆலை, 516 kWh பேட்டரி வங்கி மற்றும் 100 kW இன்வெர்ட்டர் ஆகியவை அடங்கும், இது யானை முகாம் மற்றும் 47 யானைப் பாதுகாவலர் வீடுகளுக்கு தடையற்ற பசுமை மின்சார விநியோகத்தை உறுதி செய்கிறது. மேகமூட்டமான அல்லது மழைக்காலங்களிலும் இந்த அமைப்பு இரண்டு நாட்கள் மின்னாற்றலை வழங்குகிறது, இது அக்கிராமத்தை பசுமை மின்சாரம், நிலையான வாழ்க்கை மற்றும் இயற்கையுடன் இணக்கமான ஒரு வாழ்க்கை மாதிரியாக மாற்றுகிறது. இது நாட்டில் புலிகள் காப்பக நிர்வாகத்தில் சிறந்த நடைமுறைகளில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

காவடி பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்

முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகம் ஆகியவற்றில் காலியாகவுள்ள காவடி பணியிடங்களை நிரப்பிடும் வகையில் 6 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பழங்குடியினரின் விலைமதிப்பற்ற பங்கை அங்கீகரித்து, பழங்குடி சமூகங்களிலிருந்து காவடிகளுக்கு நேரடி ஆட்சேர்ப்பு வாய்ப்புகளை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு சேவை விதிகளில் திருத்தம் செய்துள்ளது, இது அவர்களின் பாரம்பரிய நிபுணத்துவம் பாதுகாக்கப்பட்டு யானை மேலாண்மை நடைமுறைகளில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்கிறது. இந்த நடவடிக்கை பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், கலாச்சார பாரம்பரியத்தையும் தலைமுறைகளுக்கு இடையேயான அறிவு பரிமாற்றத்தையும் பாதுகாக்கிறது.

இந்த நிகழ்ச்சியில், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமை! வணிக மாநாட்டில் பங்கேற்க

# நந்தம்பாக்கம் வருகை தரும் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினருக்கு பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

*சென்னை,அக். 7*

*ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் விண்வெளி-பாதுகாப்பு தொழில்களுக்கான சர்வதேச வணிக மாநாட்டில் பங்கேற்க வருகை தரும் முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் இன்று (7.10.2025) காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.*

*எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர், பாக முகவர்கள் (BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.*

*இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் தெரிவித்துள்ளார்.*

